# ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

## அமைவிடம்

இலங்கையின் புராதன சிவாலயம் முன்னேஸ்வரம். இவ்வாலயம் இலங்கையின் மேற்குப்பகுதியில் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிற்கு கிழக்காக இரண்டு கிலோமீற்றர் தொலைவில் சிலாபம் – குருணாகல் வீதியில் முன்னேஸ்வரம் கிராமத்தில் விளங்குகின்றது.

## பெயர் விளக்கம்

முன்னேஸ்வரம் எனும் பெயர் முன்னேசுவரம், முன்னேஸ்வரம், முனீஸ்வரம், முன்னேச்சரம், முனீசுவரம், மொனேசரயோ எனப் பல்வேறு மருவுப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

முன்னேஸ்வரம் எனும் பெயர் முன்தோன்றிய ஈஸ்வரம் என்ற பெருமையாலும்; பெயரறியா முனிவர்கள் வழிபட்டமையாலும்; முனிவர்க்கெல்லாம் பெருமுனியாம் சிவபெருமானின் ஈஸ்வரம் என்பதாலும், மிக நீண்டகாலம் பூஜிக்கப்பட்ட ஈஸ்வரனின் ஆலயம் என்பதாலும்; பிரம்மாவினால் முன்பு பூஜிக்கப்பட்டமையினாலும்; சிறப்பு மிக்கதாக போற்றப்படும் பஞ்ச ஈஸ்வரங்களான இராமேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம், நகுலேஸ்வரம் என்னும் நான்கு ஈஸ்வரங்களுள் காலத்தால் முற்பட்டது எனும் பொருளுணர்த்தும் முன்னேஸ்வரம் என்றும் பல்வேறு காரணங்களால் முன்னேஸ்வரம் எனும் சிறப்புப் பெயர் பெற்று விளங்குகின்றது.

## அமைப்பு

சிவாகம விதிக்கமைய கிழக்கு நோக்கியதும் நான்கு வாயில்களையுடையதாகவும் விளங்கும் இவ்வாலயத்தின் கருவறை மிகவும் பிரமாண்டமானதும் அற்புதமானதும் கலையழகு மிக்கதுமாகும்.

இவ்வாலயத்தின் கருவறையில் ஸ்ரீ முன்னைநாதப் பெருமானாக சிவனும், ஸ்ரீ வடிவாம்பிகை அம்பாளான சக்தியும் ஐக்கியமாக விளங்குகின்றனர்.

விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாக பரிவார தெய்வங்களும், கோயில்களும் விளங்குகின்றன.

## சிறப்பு

புராதன வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் பெற்றுவிளங்கும் இவ்வாலயம் இதிஹாசபுராணச் சிறப்பம்சங்களை மூர்த்தி, தலம், தீர்த்தம், தோத்திரம், விருக்ஷம் என்பவற்றைப் பெற்று விளங்குகின்றது.

பெரிய கோவில் அல்லது மஹா தேவாலயம் என அழைக்கப்படும் இவ்வாலயம் மூர்த்தியாக வடிவாம்பிகையுடன் உறையும் முன்னைநாதப் பெருமானையும்; ஸ்தலமாக முன்னேஸ்வர தலத்தையும்; தீர்த்தமாக சித்தாமிருத கூபம் முதல் சிவதீர்த்தம் வரையான பதினெண் தீர்த்தங்களினால் சூழப்பெற்றும்; மாயவனாறு (தெதுறுஓயா) எனும் ஆற்றினை வடக்குத்திசையில்

கொண்டதாகவும்; விருக்ஷமாக அரச மரத்தையும், ஸ்தோத்திரமாக வியாச மகாமுனி, ஸ்ரீராமர் முதலான மஹான்களால் ஸ்தோத்தரிக்கப்பட்டதாகவும்; சிறப்பாக மூலாலயத்திற்கு நேரே ஸ்தல விருக்ஷம், திருக்குளம், மயானம் என்பவை அமையப்பெற்ற இயற்கை அமைப்பின் சிறப்போடு இம்முன்னேஸ்வர ஷேத்திரம் விளங்குகின்றது.

## சக்திபீடம்

சிவமஹாபுராணத்து சனத்குமார சம்ஹிதையில் 'அலகேஸ்வரம்' எனப் புகழப்படுகின்றது. அறுபத்தி நான்கு சக்திபீடங்களுள் 'சிங்களபீடம்' எனவும், 'சாங்கரீ பீடம்' எனவும்; குப்ஜிகா தந்திரத்தில் ' தேவமோஹினீ பீடம்' எனவும்; மார்க்கண்டேய புராணத்து காமாக்ஷி விலாசம் எனும் பகுதியில் சிறப்பித்துக் கூறப்படும் சக்திபீடமாகவும்; அம்பிகையின் இடது தொடை விழுந்த ஸ்தானமாகவும் சிறப்புப் பெறும் தன்மையோடு கருவறையிலே மஹாமேரு எனப்படும் ஸ்ரீசக்ரம் விளங்குவதோடு சிறப்பான முறையில் ஸ்ரீசக்ர ஆராதனைகள் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

## இராமாயணத் தொடர்பு

இராமயணத்தில் இராமரது இராவண சம்ஹாரத்தின் பின் இராமனைத் தொடர்ந்த பிரம்மஹத்திதோஷம் இவ்வாலயத்திலேயே நீக்கப்பெற்றது. இதுபற்றி வடமொழி ஸ்காந்தத்து ஸ்ரீமத் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தின் பதினேழாம் அத்தியாயம் 'ஸ்ரீ ராமர் பிரம்மஹத்தி நீக்கியமை' பற்றிக் கூறுகின்றது.

## வியாசர் பாபவிமோசனம்

காசியில் விஸ்வநாதப் பெருமானது சந்நிதியில் வியாச மஹாமுனிவர் செய்த பாபம் முன்னேஸ்வரத்திலே நீங்கப் பெற்றமையும், வியாசர் முன்னைநாதரைத் துதித்தமைப் பற்றியும் தக்ஷிணகைலாச மஹாத்மியத்தின் பதினாறாம் அத்தியாயம் 'ஸ்ரீ முன்னேஸ்வர ஷேத்திர வைபவ கதனம்' எனச் சிறப்பித்துக் கூறுகின்றது.

## வரலாற்றுச் சிறப்பு

'முன்னேஸ்வர மான்மியம்' எனும் நூல் கூறும் மரபின்படி குளக்கோட்டு மன்னன் (கி.பி.434 – 479) திருப்பணி, ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் (கி.பி.1410 – 1462) திருப்பணி, ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னன் (கி.பி.1509 – 1528) திருப்பணி என்பனவும்; சிறப்பும் மகிமையும் கொண்ட இவ்வாலயம் போர்த்துக்கேயரால் படையெடுக்கப்பட்டு கி.பி.1578ல் தரைமட்டமாக்கப்பட்டது என்றும்; இம் மகிமையை அறிந்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் (கி.பி.1742 – 1782) 175 ஆண்டுகள் பொலிவு மங்கிக்கிடந்த இவ்வாலயத்திற்கு திருப்பணிகள் செய்தான் என்றும் அறிய முடிகின்றது.

## சாசனங்கள்

இவ்வாலயத்தின் பரிபாலன குருமார்களுக்கு ஆறாம் பராக்கிமபாகு மன்னனால் அளிக்கப்பட்ட (கி.பி.1448) சிலாசாசனம் பிரசித்தமானது. இச்சாசனம் கர்ப்பக்கிரகத்தின் அதிஷ்டானத்தில் தெளிவாக இன்றும் உள்ளது. மேலும் ஒன்பதாம் பராக்கிரமபாகு மன்னனின் (கி.பி.1517) தாமிரசாசனமும் , கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கமன்னனின் (கி.பி.1753) செப்புப்பட்டயமும் வரலாற்றுச்சாசன ஆதாரங்களாக அமைகின்றன.

## ஆலய பரிபாலனம்

மிக நீண்டகால பாரம்பரிய மரபில் சிவாச்சார்ய மரபினரால் பிரம்மஸ்ரீ நா.குமாரஸ்வாமிக் குருக்கள் (கி.பி.1856 – 1901), பிரம்மஸ்ரீ மு.சோமாஸ்கந்தக் குருக்கள் (1886 – 1940) பிரம்மஸ்ரீ சி.பாலசுப்பிரமணிய குருக்கள் (கி.பி.1896 – 1968), பிரம்மஸ்ரீ கா.இரத்தின கைலாசநாதக் குருக்கள் (கி.பி.1926 – 2006) என தொடர்ந்தும் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

## நித்ய பூஜைகள்

சிவாகம விதிமுறைகளுக்கு அமைவாக தினமும் ஆறுகாலப் பூஜைகள் இடம் பெறுகின்றன. உஷக்கால பூஜை (காலை 5.30 மணி), காலசந்திப் பூஜை (காலை 7.30 மணி), உச்சிக்கால பூஜை (நண்பகல் 12.00 மணி), சாயரட்சை பூஜை (மாலை 5.00 மணி),இரண்டாம் கால பூஜை (இரவு 7.00 மணி), அர்த்தஜாமப் பூஜை (இரவு 8.00 மணி) என்பன கிரமமாக ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான நித்யபூஜ பத்ததியின் விதிப்படி நடைபெற்று வருகின்றன.

## நைமித்திய பூஜைகள்

சதுர்த்தி பிரதோஷம், பௌர்ணமி மாத சங்கிராந்தி காலங்களில் விஷேட அபிஷேகங்களும், பிரதோஷ பூஜை உற்சவம் என்பனவும் பௌர்ணமி தினத்தில் விஷேட ஸ்ரீ சக்ர பூஜையும் நடைபெற்று வருகின்றன.

## மகோத்சவங்கள்

சிவாகம விதிப்படி நித்ய பூஜையில் ஏற்படும் தோஷங்களை நீக்கவும் நித்யபூஜையில் ஏற்படும் தோஷங்களை நீக்கவும் ஐந்தொழில்களையும் உணர்த்தவும் இரு மஹோத்சவங்கள் வருடம் தோறும் இடம் பெறுகின்றமை.

மாசிமாதத்து பௌர்ணமி நாளை இறுதிநாளாகக் கொண்டு கொடியேறி பத்து நாட்கள் பிரம்மோற்சவம் நடைபெறுகின்றது.

ஆவணி மாதத்து பௌர்ணமியை இறுதிநாளாகக் கொண்டு கொடியேறி இருபத்தெட்டு நாட்கள் மஹோத்சவம் நடைபெறுகின்றது. இம் மஹோத்சவத்தில் சிறப்பான உற்சவங்களும் சிறப்பம்சங்கள் பாரம்பரியங்கள் பலவும் உண்டு.

## நவராத்திரிகள்

இவ்வாலயத்தில் சாரதா நவராத்திரி, வசந்த நவராத்திரி ஆகிய இரண்டு நவராத்திரிகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வசந்த நவராத்திரி காலத்தில் தசசண்டீ ஹோமம், அபிஷேகம், ஸ்ரீசக்ரபூஜை, துர்க்கா ஹோமம் என்பனவும்; சாரதா நவராத்திரி காலத்தில் விஷேட அஷ்டோத்திர சத சங்காபிஷேகம், உற்சவம் ஸ்ரீசக்ர பூஜை, கொலுபூஜை என்பனவும் சிறப்பம்சமாகும்.

## லக்ஷார்ச்சனை

தை மாதத்து பௌர்ணமி நாளை இறுதிநாளாகக் கொண்டு பதினைந்து நாட்கள் லக்ஷார்ச்சனை இடம்பெறுகின்றது.

இவ்வாறாக பல்வேறு மகிமைகளும், சிறப்புக்களும், தனித்துவமான மரபுகளும், வரலாற்றுச் சிறப்புக்களும் கொண்டு விளங்கும் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதப் பெருமானை வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வோமாக!

“மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்”